# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C.No.56/2020

2024 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.விலங்கடியான் (அ.சா.6) | தொழில் | : விவசாயம் |
| த/பெ., க/பெ. | : திரு. மாரியப்பன் | வயது | : 52 |
| கிராமம் | : பழைய ஆயக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 18.10.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் பழைய ஆயக்குடியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 கிருஷ்ணசாமியை தெரியும். அ.சா.1 கிருஷ்ணசாமி குறும்பம் மடத்தில் குடியிருக்கிறார். அ.சா.2 ஐ எதிரிகள் அடித்துவிட்டதாக எங்களுக்கு தகவல் சொன்னார்கள். மடத்தை சேர்ந்த நாங்கள் 7 பேர் அங்கு போனோம். அது பற்றி அ.சா.2 ஐ நாங்கள் மடத்தில் வைத்து விசாரித்துக்கொண்டிருந்தோம். அ.சா.1 கிருஷ்ணசாமி வேலை முடிந்து வந்தவர் எதிரிகளை பார்த்தவுடன் தகராறு ஏற்பட்டுவிட்டது. நாங்கள் வந்து

**பார்த்தபோது அ.சா.1 ஐ கத்தியால் எதிரிகள் குத்திவிட்டனர். அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துப்போனோம். எதிரிகள் ஓடிவிட்டனர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>குறுக்கு விசாரணை</u> :– இல்லை.**

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.10.18 18:57:41 +0530

**கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,**
**பழனி.**